# பத்திரிக்கை செய்தி

## சொத்து மதிப்பு சான்றிதழ் வழங்க லஞ்சம் பெற்ற வழக்கில் அப்போதைய தாசில்தாருக்கு 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறை

புகார்தாரர் திரு.சரவணன், மதுரை மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் காண்டராக்டர் தொழில் செய்து வருகிறார். புகார்தாரர் அரசு ஒப்பந்தம் எடுப்பதற்காக சொத்து மதிப்பு சான்றிதழ் கோரி திருமங்கலம் தாலுக்கா அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.பாலசுப்பிரமணியன், தாசில்தார், திருமங்கலம் தாலுக்கா அலுவலகம், மதுரை மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.5,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, மதுரை பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரின் அடிப்படையில் பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 12.01.2015 அன்று மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.பாலசுப்பிரமணியன் அவர்களின் அறிவுரையின்பேரில் திரு.செல்லப்பா, உதவியாளர், தாலுக்கா அலுவலகம், திருமங்கலம் மதுரை மாவட்டம் அவர்கள் புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் ரூ.5,000/- பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையால் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது மதுரை சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. திரு.செல்லப்பா அவர்கள் கடந்த 25.01.2024ம் தேதி காலமாகிவிட்டார். இவ்வழக்கில் இன்று 29.04.2025 திரு.பாலசுப்பிரமணியன், முன்னாள் தாசில்தாருக்கு 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டணை மற்றும் ரூ.4,000/- அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.